Learn Beyond

# KPR IAS Academy

Institute for IAS, IPS, IFS and TNPSC Exams

No. 5, AKS Nagar, Near Gandhi Park, Coimbatore - 641 001

# பெட்ரோல், டீசல் விலை மீண்டும் உயர்வு

புது தில்லி, மே 19: பெட்ரோல், டீசல் சில்லறை விற்பனை விலையை எண்ணெய் நிறுவனங்கள் செவ்வாய்க்கிழமை (மே 19) லிட்டருக்கு தலா 90 காசு வீதம் உயர்த்தின.

கடந்த 4 நாள்களில் இரண்டாவது முறையாக இரு முக்கிய எரிபொருளின் விலை உயர்த்தப்பட்டுள்ளது. இது வாகன ஓட்டிகள், பொதுமக்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இந்த விலை உயர்வால், சென்னையில் 103.90-க்கு விற்கப்பட்ட ஒரு லிட்டர் பெட்ரோல் தற்போது 104.80-ஆக உயர்ந்துள்ளது. டீசல் விலை லிட்டருக்கு ரூ. 95.25-இல் இருந்து ரூ. 96.15-ஆக உயர்ந்துள்ளது.

**விலை உயர்வு ஏன்?:** மேற்காசிய போர் காரணமாக சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் தட்டுப்பாடு ஏற்பட்டு, விலை உயர்ந்துள்ளதால் ஏற்பட்டுள்ள இழப்பை ஈடு செய்ய இந்த விலை உயர்வு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக எண்ணெய் நிறுவனங்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டன.

**4 நாள்களில் இரண்டாவது முறை:** முன்னதாக, பெட்ரோல், டீசல் சில்லறை விற்பனை விலையை எண்ணெய் நிறுவனங்கள் கடந்த 15-ஆம் தேதி லிட்டருக்கு ரூ. 3 அளவுக்கு உயர்த்தின. வாகனங்களுக்கான அழுத்தப்பட்ட இயற்கை எரிவாயு (சிஎன்ஜி) விலை கிலோவுக்கு ரூ.2 உயர்த்தப்பட்டது.

தொடர்ந்து, வாகனங்களுக்கான சிஎன்ஜி விலை இரண்டாவது முறையாக கடந்த ஞாயிற்றுக்கிழமை கிலோவுக்கு ரூ.1 அதிகரிக்கப்பட்டது.

## 4 நாள்களில் இரண்டாவது முறை




## தொடரும் இழப்பு

விலை உயர்வுக்குப் பிறகும், எண்ணெய் நிறுவனங்கள் தொடர்ந்து குறிப்பிடத்தக்க அளவில் இழப்பைச் சந்தித்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இது குறித்து பெட்ரோலிய அமைச்சக இணைச் செயலர் சுஜாதா சர்மா அளித்த பேட்டியில், 'பெட்ரோல், டீசல் சில்லறை விற்பனை விலை கடந்த மே 15–ஆம் தேதி உயர்த்தப்பட்டதன் மூலம், எண்ணெய் நிறுவனங்கள் சந்தித்து வந்த இழப்பு நான்கில் ஒரு பங்கு அளவு குறைந்துள்ளது. இருந்தபோதும், எண்ணெய் நிறுவனங்கள் நாள் ஒன்றுக்கு ரூ. 750 கோடி அளவுக்கு இழப்பைச் சந்தித்து வருகின்றன' என்றார்.



கிரிசில் எண்ணெய் சந்தை நிறுவனம் இது குறித்துக் கூறுகையில், 'விலை உயர்வுக்குப் பிறகும் பெட்ரோல் விற்பனையில் லிட்டருக்கு ரூ.10 வீதமும், டீசல் விற்பனையில் லிட்டருக்கு ரூ.13 வீதமும் இழப்பு தொடர்கிறது' என்று தெரிவித்தது.

அதுபோல, பெட்ரோல், டீசல் விலையும் லிட்டருக்கு தலா 90 காசு வீதம் இரண்டாவது முறையாக உயர்த்தப்பட்டுள்ளது.

முன்னதாக, கடந்த 2022–ஆம் ஆண்டு ஏப்ரலில் பெட்ரோல், டீசல் விலை உயர்த்தப்பட்டது. அதன் பிறகு மாற்றமின்றி விற்கப்பட்டு வந்த நிலையில், மக்களவைத் தேர்தலுக்கு சற்று முன்பாக கடந்த 2024–ஆம் ஆண்டு மார்ச் மாதம் பெட்ரோல் மற்றும் டீசல் விலை லிட்டருக்கு தலா ரூ.2 வீதம் குறைக்கப்பட்டது. தற்போது அடுத்தடுத்து இருமுறை விலை உயர்த்தப்பட்டுள்ளது.

மேற்காசியப் பிரச்னைக்கு தீர்வு எட்டப்படாவிட்டால் விலை உயர்வு தொடரும் என்ற அச்சமும் நிலவுகிறது.

**சிக்கன நடவடிக்கை:** மேற்காசிய போர் காரணமாக ஏற்பட்டுள்ள நெருக்கடியின் பின்னணியில், எரிபொருள் சிக்கன நடவடிக்கையை பிரதமர் நரேந்திர மோடி கடந்த வாரம் மேற்கொண்டார்.

அதன் ஒரு பகுதியாக தனது பாதுகாப்பு அணிவகுப்பு வாகன எண்ணிக்கையை கணிசமாகக் குறைத்ததோடு, பொதுமக்களும் பெட்ரோல், டீசல், எரிவாயு போன்றவற்றை சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும் என்று பிரதமர் மோடி வேண்டுகோள் விடுத்தார்.

பிரதமரைத் தொடர்ந்து, பல்வேறு மாநில முதல்வர்களும், மத்திய அமைச்சர்களும் எரிபொருள் சிக்கன நடவடிக்கையை மேற்கொண்டனர்.

எனினும், பெட்ரோல், டீசல் மற்றும் எரிவாயு விலை உயர்வு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பெட்ரோலில் 20 சதவீத எத்தனால் கலப்பு (இ20) கடந்த ஏப்ரல் 1-ஆம் தேதி முதல் நாடு முழுவதும் அமல்படுத்தப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இதன் மூலம் கச்சா எண்ணெய் இறக்குமதியை சற்று குறைக்க முடியும் என்று அரசுத் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

KPR IAS Academy
Institute for IAS, IPS, IFS and TNPSC Exams
Learn Beyond
No. 5, AKS Nagar, Near Gandhi Park, Coimbatore - 641 001

# மருத்துவர் சுப்பையா கொலை வழக்கு: 9 குற்றவாளிகளுக்கு ஆயுள் தண்டனை

## உச்சநீதிமன்றம் தீர்ப்பு

நமது நிருபர்

புது தில்லி, மே 19: சென்னையில் மருத்துவர் சுப்பையா 2013 ஆம் ஆண்டு கொலை செய்யப்பட்ட வழக்கில் குற்றவாளிகளை விடுதலை செய்து சென்னை உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை செவ்வாய்க்கிழமை ரத்து செய்த உச்சநீதிமன்றம், குற்றவாளிகளுக்கு ஆயுள் சிறை தண்டனை விதித்து செவ்வாய்க்கிழமை தீர்ப்பளித்தது.

இந்த வழக்கில் குற்றவாளிகளுக்கு மரண தண்டனை விதிக்க வேண்டாம் என உச்சநீதிமன்றத்தில் முன்பு நடைபெற்ற விசாரணையின் போது தமிழக அரசு அதன் நிலைப்பாட்டைத் தெரிவித்திருந்தது. இதை கவனத்தில் கொண்ட உச்சநீதிமன்ற நீதிபதிகள் எம். எம். சுந்தரேஷ், சதீஷ் சந்திர சர்மா அடங்கிய அமர்வு செவ்வாய்க்கிழமை அளித்த தீர்ப்பில் குற்றவாளிகள் ஒன்பது பேருக்கும் ஆயுள் சிறை தண்டனை விதிப்பதாகக் குறிப்பிட்டது. முன்னதாக, இந்த வழக்கில் ஒன்பது பேரையும் குற்றவாளிகள் என தீர்ப்பளித்த விசாரணை நீதிமன்றம் அதில் ஏழு பேருக்கு மரண தண்டனையும் இருவருக்கு ஆயுள் சிறை தண்டனையும் விதித்துத் தீர்ப்பளித்தது.

இருப்பினும், தீர்ப்புக்கு எதிரான மேல்முறையீட்டு வழக்கை விசாரித்த சென்னை உயர்நீதிமன்றம், குற்றவாளிகள் அனைவரையும் 2024-இல் விடுதலை செய்து தீர்ப்பளித்தது. அதை ரத்து செய்து உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்பில் மேலும் கூறியிருப்பதாவது:

இந்த வழக்கில் உயர்நீதிமன்றம் மிகப்பெரும் தவறை செய்திருக்கிறது. முறையாக ஆராயாமல் தீர்ப்பளித்திருக்கிறது. எனவே குற்றஞ்சாட்டப்பட்ட அனைவரையும் குற்றவாளிகள் என தீர்ப்பளித்த விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்பு உறுதிபடுத்தப்படுகிறது. அவர்கள் அனைவருக்கும் ஆயுள் தண்டனை விதிக்கப்படுகிறது.

அதேசமயம், முதலாவது மற்றும் இரண்டாவது குற்றவாளிகளின் (தம்பதி) வயோதிகத்தைக் கருதி அவர்களின் தண்டனையை நிறைவேற்றுவதற்கு இடைக்காலத் தடை விதிக்கப்படுகிறது. அவர்கள் மாநில ஆளுநரிடம் மன்னிப்பு கோரி மனு தாக்கல் செய்ய அவர்களுக்கு எட்டு வார காலம் அவகாசம் அளிக்கப்படுகிறது. எஞ்சிய 7 குற்றவாளிகளும் இரண்டு வாரங்களில் சரணடைய வேண்டும். அவர்கள் சரணடையாவிட்டால் அவர்களுக்கு எதிராக விசாரணை நீதிமன்றம் உரிய நடவடிக்கை எடுக்கலாம் என்று தீர்ப்பில் நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

**வழக்கு பின்னணி:** சென்னையைச் சேர்ந்த நரம்பியல் அறுவை சிகிச்சை நிபுணரான மருத்துவர் சுப்பையா, 2013 ஆம் ஆண்டு செப்டம்பர் 14 ஆம் தேதி ராஜா அண்ணாமலை புரத்தில் உள்ள மருத்துவமனைக்கு வெளியே அரிவாள் உள்ளிட்ட ஆயுதங்களால் கொடூரமாக தாக்கப்பட்டார். ஒன்பது நாள்கள் சிகிச்சையில் இருந்த அவர் அதே ஆண்டு செப்டம்பர் 23 ஆம் தேதி உயிரிழந்தார். கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள சுப்பையாவின் சொந்த கிராமமான அஞ்சுகிராமத்தில் 2.4 ஏக்கர் நிலம் தொடர்பான சொத்து தகராறு காரணமாக இந்த கொலை நடந்ததாக காவல்துறை புலனாய்வில் தெரியவந்ததாக கூறப்பட்டது.

இந்தப் படுகொலை தொடர்பாக மருத்துவர் சுப்பையாவின் உறவினர்கள் பொன்னுசாமி, அவரது மனைவி மேரி புஷ்பம், அவர்களின் இரு மகன்கள் உள்பட 10 பேரை காவல்துறையினர் கைது செய்தனர். அதில் ஒருவர் அரசு தரப்பு சாட்சியாக மாறினார்.

இந்த வழக்கில் 2021 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் விசாரணை நீதிமன்றம் அளித்த தீர்ப்பில், ஏழு குற்றவாளிகளுக்கு மரண தண்டனையும், இரண்டாவது மற்றும் ஆறாவது குற்றவாளிகளான மேரி புஷ்பம், யேசு ராஜன் ஆகிய இருவருக்கு ஆயுள் சிறை தண்டனையும் விதித்தது குறிப்பிடத்தக்கது.

# தேசிய விளையாட்டுப் போட்டிகள்: தமிழக அரசுப் பள்ளிகள் சாதனை

சென்னை, மே 19: தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் தமிழக அரசுப் பள்ளி மாணவர்கள் சாதனை படைத்துள்ளனர்.

இது குறித்து பள்ளிக்கல்வித் துறை வெளியிட்ட செய்திக் குறிப்பு: இந்திய பள்ளிகள் விளையாட்டு கூட்டமைப்பு (எஸ்ஜிஎஃப்ஐ) சார்பில் 69-ஆவது தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகள் தெலங்கானா, குஜராத், ராஜஸ்தான் உள்ளிட்ட பல்வேறு நகரங்களில் அண்மையில் நடைபெற்றது. இதில் நாடு முழுவதிலுமிருந்து மொத்தம் 45 அணிகள் பங்கேற்றன.

இதில் மகாராஷ்டிர மாநிலம் 187 தங்கம், 169 வெள்ளி, 190 வெண்கலம் என 546 பதக்கங்களுடன் முதலிடத்தையும், ஹரியாணா 121 தங்கம், 96 வெள்ளி, 96 வெண்கலம் என 317 பதக்கங்களுடன் இரண்டாமிடத்தையும், தில்லி 107 தங்கம், 116 வெள்ளி, 94 வெண்கலம் என 371 பதக்கங்களுடன் மூன்றாம் இடத்தையும் பிடித்தன. இந்தப் பட்டியலில், 55 தங்கம், 58 வெள்ளி, 93 வெண்கலம் என 206 பதக்கங்களைப் பெற்று தமிழகம் ஏழாவது இடத்தைப் பிடித்தது.

குறிப்பாக 17 வயதுக்கு உள்பட்ட மாணவர்களுக்கு நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் தமிழக அரசுப் பள்ளி மாணவர்கள் பங்கேற்ற அணி முதல் முறையாக தேசிய அளவில் இரண்டாமிடம் பிடித்து வெள்ளி பதக்கம் பெற்றது.

இதையடுத்து வெற்றி பெற்ற அணியில் இடம் பெற்றிருந்த வீரர்கள் சென்னை நுங்கம்பாக்கத்தில் உள்ள பள்ளிக் கல்வி வளாகத்தில் துறையின் அமைச்சர் ராஜ்மோகன், செயலர் சந்தரமோகன், இயக்குநர் எஸ்.கண்ணப்பன் உள்ளிட்டோரை செவ்வாய்க்கிழமை நேரில் சந்தித்தனர். அப்போது, போட்டிகளில் தாங்கள் பெற்ற சான்றிதழ்கள், பதக்கங்கள், வெற்றிக் கோப்பை ஆகியவற்றை காண்பித்து வாழ்த்துப் பெற்றனர்.

# தமிழகத்துக்கு தடையின்றி உரம் வழங்க வேண்டும்

## பிரதமருக்கு முதல்வர் விஜய் வலியுறுத்தல்

சென்னை, மே 19: தமிழகத்துக்கு நடப்பு காரீப் பருவத்துக்கு தேவையான உரங்களை தங்கு தடையின்றி வழங்க வேண்டும் என்று பிரதமர் நரேந்திர மோடிக்கு, முதல்வர் விஜய் கடிதம் மூலம் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர், பிரதமருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் கூறியிருப்பதாவது:

தமிழகத்தில் 40 சதவீதத்துக்கும் அதிகமானோர் வேளாண்மையை வாழ்வாதாரமாகக் கொண்டுள்ளனர். தமிழகத்தில் சுமார் 48.27 லட்சம் ஹெக்டேரில் நிகர சாகுபடியும், 62.25 லட்சம் ஹெக்டேரில் மொத்த சாகுபடியும் மேற்கொள்ளப்படுகிறது. தமிழகத்தில் மொத்த விவசாயிகளில் சுமார் 92 சதவீதம் பேர், சிறு மற்றும் குறு விவசாயிகளாவர்.

இந்தியாவின் மொத்த நீர் வளங்களில் 3 சதவீதம் மட்டுமே தமிழகத்தில் உள்ளது.

நெல், சிறுதானியங்கள், எண்ணெய்வித்துகள், பருத்தி, கரும்பு, காய்கறிகள், மலர்கள், பழங்கள், மூலிகை மற்றும் நறுமணப் பயிர்கள், சுவைதாளிதப் பயிர்கள், தோட்டப்பயிர்கள் எனப் பல்வகைப்பட்ட பயிர்களின் சாகுபடி தமிழகத்தில் மேற்கொள்ளப்படுகிறது.

கடந்த மே மாதம் 10-ஆம் தேதி தமிழக முதல்வராகப் பொறுப்பேற்றதிலிருந்து, பல்வேறு துறைகளின் செயல்பாடுகளைத் துறை வாரியாக ஆய்வு செய்து வருகிறேன். வேளாண்மை - உழவர் நலத் துறையின் செயல்பாடுகள் குறித்த ஆய்வின்போது, நிகழ் ஆண்டு ஏப்ரல், மே மாதங்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட உரத்தேவையில், 39,001 மெட்ரிக் டன் யூரியா, 28,607 மெட்ரிக் டன் டிஏபி, 24,235



மெட்ரிக் டன் பொட்டாஷ் ஆகிய உரங்கள் உர உற்பத்தியாளர்களால் தமிழகத்துக்கு வழங்கப்படவில்லை.

மேலும், மாநிலம் முழுவதும் நெல், உளுந்து, பச்சைப்பயறு, நிலக்கடலை, எள், தோட்டக்கலைப் பயிர்கள் ஆகியவற்றின் சாகுபடிப் பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன. தென்மேற்குப் பருவமழை மே மாதம் மூன்றாம் வாரத்தில் தொடங்கும் என்று இந்திய வானிலை ஆய்வு மையத்தால் கணிக்கப்பட்டுள்ளது.

இந்த சூழலில் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் பரவலாக மழை பெய்து வருவதாலும், காரீப் பருவத்தில் அதிகபட்ச பரப்பில் பயிர் சாகுபடி மேற்கொள்ள விவசாயிகள் மத்தியில் ஆர்வம் எழுந்துள்ள நிலையில், யூரியா மற்றும் டிஏபி உரங்களின் தேவை அதிகரிக்க வாய்ப்புள்ளது. இத்தருணத்தில், உரப்பற்றாக்குறை ஏற்பட்டால் மாநிலத்தின் உணவுப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட வாய்ப்புள்ளது.

நடப்பு காரீப் பருவத்தில் மொத்த சாகுபடிப் பரப்பில் 40 சதவீதமான 25 லட்சம் ஹெக்டேரில் பல்வேறு பயிர்களை சாகுபடி செய்வதற்கு ஏதுவாக, தேவையான உரங்கள் கிடைப்பதை உறுதி செய்வதில் மாநில அரசு உறுதி பூண்டுள்ளது. பல்வேறு சாதகமான காரணிகளால் நடப்பு காரீப் பருவத்தில் பயிர் சாகுபடியில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதால், யூரியா, டிஏபி போன்ற நேரடி உரங்களின் தேவை எதிர்வரும் நாள்களில் கணிசமாக உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அதனை நிறைவு செய்திட 3.83 லட்சம் மெட்ரிக் டன் யூரியா, 1.05 லட்சம் மெட்ரிக் டன் டிஏபி மற்றும் 0.83 லட்சம் மெட்ரிக் டன் பொட்டாஷ் ஆகியவற்றை உடனடியாக தமிழகத்துக்கு வழங்குவதை உறுதி செய்ய வேண்டும் என்று முதல்வர் விஜய், தனது கடிதத்தில் வலியுறுத்தியுள்ளார்.